**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 09.09.2025**

**O.S. 75/2020**

**வா.சா. 3 - உமாபதி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து இரண்டில் எது வாதி சொத்து பிரதிவாதி சொத்து என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சகோதரர் வாதிக்கு வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் என் தந்தை காலஞ்சென்ற பின் பாகப்பிரிவினை படி கிடைத்தது. என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்த்து ஐந்து பேர். மேற்படி பாகப்பத்திரத்தில் நான் கட்சியாகவோ சாட்சியாகவோ இல்லை என்றால் சரிதான். பாகப்பத்திரம் எந்த தேதியின் போடப்பட்டது என்றால் தெரியாது. பாகப்பத்திரத்தில் வாதிக்கு எந்த சொத்து எந்த பட்டிகையாக ஒதுக்கப்பட்டது என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. பாகப்பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பாகப்பத்திரத்தை படித்து பார்க்காததால் பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது.

பாகப்பத்திரத்தில் என்னுடைய இதர மூன்று சகோதரர்களுக்கும் வழக்கு பட்டிகை பாதைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எனது சகோதரர் வாதிக்கு பத்தடி பாதை இருப்பதாக எந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்பா எழுதிக்கொடுத்த பூர்வீக பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பத்தடி பாதை எந்த இடத்திலிருந்து எந்த இடம் வரை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மேலசூரங்குடி ரோட்டில் இருந்து எனது வீட்டுவரைக்கும் உள்ளது. வழக்கில் பாதையாக

குறிப்பிடப்பட்டுள்ள பகுதி வாதிக்கு உரிமைப்பட்டதா 1ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டதா என்றால் 1ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் ஆவணத்தில் எனது சகோதரருக்கு 5 அடி பாதை தான் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனால் உயிருடன் இருக்கும் போது வழக்கு பட்டிகை சொத்திற்கு பாதை அவகாசம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பாதை அவகாசம் கொடுத்து தீர்ப்பாகி விட்டது என்றால் தெரியாது.

மேற்படி கொடுக்கப்பட்ட பாதை அவகாசம் மொத்த குடும்ப சொத்திற்கும் வாதியின் சொத்திற்கும் தெற்கு பக்கம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பின் படி எனது தகப்பனாருக்கு வழக்கு பட்டிகை சொத்து தெற்கு பகுதியில் 3 அடி வீதி பாதை தீர்ப்பாகி இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் சொத்திற்கு கிழக்கு பிரதிவாதியின் சொத்து மேற்கு பக்கம் பிரதிவாதியின் தோப்பு உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டு முகப்பில் வடக்கு பக்கம் 10 அடி பாதை எதுவும் மேற்கு பக்க சொத்திற்கு எனது சகோதரர் வாதி விடவில்லை என்றால் சரிதான் எதற்கு விடவேண்டும். கட்டுமானம் அகற்றகூடும் வகையில் இருப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் அது எவ்வாறு என்றால் சன்சைடு படிகட்டு ஆக்கிரமித்து கட்டியுள்ளார் அது அகற்றப்படவேண்டும்.

சன்சைடு வீட்டுடன் சேர்ந்தது என்றால் சரிதான். எத்தனை அடி வீதி மற்றும் நீளத்தில் சன்சைடு கட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எத்தனை அடி வீதி மற்றும் நீளத்தில் படிகட்டு போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு பட்டிகை ஐட்டம் 1 சொத்துக்கு தெற்கு பக்கம் 4½ சென்ட் தொட்டு உள்ள சொத்தை எனது சகோதரர் வாதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 4½ சென்ட் எனது சகோரர்

வாங்கிய தெற்கு பக்க சொத்தும் ஒரே கிடப்பாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4½ சென்ட் எனது சகோரரர் வாங்கிய தெற்கு பக்க சொத்துக்கும் சுற்றி காம்பவுண்டு சுவர் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனக்கு தெற்கு பக்கம் உள்ள விபரங்கள் தெரியாது. தெற்கு பக்கம் உள்ள 3 அடி பாதை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் அங்கு போனதில்லை. எனது சகோதரர் வாதி வண்டி மாடு எதுவும் வைக்கவிலலை என்றால் சரிதான் கார் மற்றும் ஆட்டோ செல்லும். எனது சகோதரர் வாதிக்கு கார் இல்லை என்றால் சரிதான். வண்டி மாடு செல்லும்என்றால் எத்தனை அடி இருக்க வேண்டும் என்றால் 10 அடி. மாட்டு வண்டியின் நீளம், வீதி என்ன என்றால் தெரியாது.

1ம் பிரதிவாதிக்கு மேற்கு பக்கம் உள்ள சொத்திற்கு செல்வதற்கு பாதை அவகாசம் விட்டுக்கொடுக்க முடியுமா என்று எனது சகோதரர் வாதியிடம் கேட்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் இடததை பார்வையிடும் போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சொத்து சம்மந்தமாக விடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது நான் எனது சகோதரர் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**